بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.்.பா

23 March 2018
(04 Rajab 1439 AH)

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)அவர்களின் வாழ்க்கை மற்றும் (இறைப்)பணி

## **"THE LIFE & MISSION OF THE PROMISED MESSIAH (AS)"**




## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)



லாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.்.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இன்று, 2018 மார்ச் 23-ம் தேதியாகும். லுதியானாவில் சூபி அஹமதுஜான் அவர்களின் மனையில் வைத்து 40 தோழர்களிடமிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது(அலை) காதியானி அவர்கள் பை-அத்து வாங்கி, அஹ்மதியா ஜமாஅத்தை நிறுவி, தற்ப்போது 129 வருடங்கள் கடந்துள்ளது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் கையில் பை-அத்து செய்து கொண்ட முதல் நபர் ஹஸ்ரத் மௌலவி நூறுத்தீன்(ரலி) அவர்கள் ஆவார். பிறகு அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)அவர்களின் முதல் கலீ.்.பாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அவ்வல் ஆக நியமிக்கப்பட்டார்.

மௌரிஷியஸ் மற்றும் உலகின் பிற நாடுகளில் இந்த வரலாற்று மிக்க நாளை **“வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தினம்”** (Promised Messiah Day) என கூறப்படுகின்றது.

நாம், அஹ்மதி முஸ்லீம்கள் இந்நாளை வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் வாழ்க்கை மற்றும் அன்னாரின் மாபெரும் பணிகளைப் பற்றி நினைவூட்ட பயன்படுத்துகின்றோம்.

ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது(அலை) அவர்கள், பர்லாஸ் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவராவார். அன்னாரின் முன்னோராகிய மிர்ஸா காதிபேஹ் அவர்கள் தனது சொந்த ஊரான சமர்க்கந்திலிருந்து இந்தியாவில் குடியேறிக்

கொண்டார். அன்னாரின் குடும்பத்தினர், கோத்திரத்தினர், மற்றும் அன்னாரின் ஊழியர்களையும் சேர்த்து 200 பேர்கள் இருந்தனர். அன்னார் உயர்த்தன்மையுடையவராகவும் பண்டிதராகவும் மற்றும் இறைபக்தியுடையவராகவும் இருந்தார். அவ்வேளையில் இந்தியா, முகலாய அரசராகிய பாபரின் ஆட்சியின் கீழ் இருந்தது. பேரரசரிடம் நம்பிக்கையுடன் நடந்து, சேவைபுரிந்ததற்கு பரிசாக அன்னாருக்கு மிக விரிவான ஒரு நில பகுதியை அரசர் அளித்துக் கொண்டார். அதன்பிறகு மிர்ஸா காதி பேஹ், இந்த பரந்த நிலத்தின் ஒரு பகுதியை தேர்ந்தெடுத்து குடும்பத்தாரோடு அங்கு குடியேறிக் கொண்டார். அப்பகுதியில் அன்னார் ஒரு நகரத்தை அமைத்தார். அந்நகரத்திற்கு **“இஸ்லாம் பூர்”** என அன்னார் பெயர் சூட்டினார். காலப்போக்கில் இஸ்லாம்பூர் பலவிதமான மாற்றங்களுக்குள்ளாகியது. பிறகு அந்நகரம் **“இஸ்லாம்பூர் காதிமாஜி”** என அறியப்பட்டது. அதை தொடர்ந்து **காதிமாஜி** என்ற பெயரிலும் பின்னர் **காதி** என்றும் முடிவில் **காதியான்** என்ற பெயரிலும் மாறிக் கொண்டது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் முப்பாட்டனாராகிய மிர்ஸா குல் முஹம்மது அவர்கள் ஒரு இறைபக்தரும் நேர்மையானவருமாவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பாட்டனாராகிய மிர்ஸா அத்தா முஹம்மது அவர்கள், மிர்ஸா குல் முஹம்மதின் புதல்வராவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் தந்தை, மிர்ஸா குலாம் முர்ததாவும், தாயார், சிராஹ்பிவியும் ஆவார்கள். அன்னாரின் தாயார் விருந்து உபசரிப்பிலும் மற்றும் ஏழைகளுக்கு உதவிபுரிவதிலும் மிக விருப்பமுடையவராகயிருந்தார்.

பல்வேறு வகையான கணக்கீடுகளின்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் 1835 February 13-ம் தேதி சூரிய உதயத்திற்கு முன் பிறந்தார் (14 ஷவ்வான் 1250 ஹிஜ்ரா) என புரியவருகின்றது. அன்னாரின் பிறப்பு இரட்டையாகயிருந்தது. அன்னாரின் கூடவே ஒரு சகோதரியும் பிறந்துக் கொண்டாள். ஆனால் அச்சகோதரி உயிர்பிழைக்கவில்லை. வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் இரட்டை பிறப்பைப் பற்றி இஸ்லாமிய இலக்கியங்களில் ஏற்க்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. (சூலூல் ஹிக்கம் - முஹைத்தீன் இப்னு அரபி)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் குழந்தை பருவத்திலிருந்தே தனது நேரத்தை பயனற்றவிஷயங்களுக்காக வீணடிக்க விரும்பாமலிருந்தார். அன்னாரின் சிறுவயதில் அன்னாரின் சிறு தோழர்கள் விளையாட்டில் ஏற்படும் பொழுதெல்லாம், நேரத்தை இழக்கச் செய்யும் அத்தகைய விளையாட்டிலிருந்தெல்லாம் அன்னார் விலகி நின்றார். அன்னாரின் கல்விக்காக அவரது பெற்றோர்கள் மூன்று வெவ்வேறு ஆசிரியர்களை கொண்டு வந்தனர். ஒருவருக்கு பின் மற்றொருவர் என்ற முறையில் அந்த மூன்று ஆசிரியர்களிடமிருந்தும் பல்வேறு காரியங்களை அன்னாருக்கு கற்க முடிந்தது.

மிக இளம் வயதிலேயே வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் திருமணம் செய்து கொண்டார். அன்னாரின் முதல் திருமணம் 15-ம் வயதிலாகயிருந்தது. அன்னாரின் உறவினராகிய குர்மத் பீபியை மணம் முடிந்துக் கொண்டார். (அவரது தாயின் குடும்பத்திலிருந்து அதாவது அவரது தாயாரின் சகோதரனாகிய மிர்ஸா ஜமா அத்து பைகின் அவர்களின் புதல்வியாவார் குர்மத்து பீபீ). அத்தம்பதியாருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தது. மிர்ஸா சுல்த்தான் அஹமது, மிர்ஸா பசல் அஹ்மது. தனது தந்தை முஜத்தீது என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் முதலின் மிர்ஸா சுல்த்தான் அஹ்மது நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் தனது தந்தையின் மரணத்திற்கு பிறகு அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டு பை-அத்தும் செய்து கொண்டார். அதாவது அஹ்மதியா ஜமா அத்தின் மீது நம்பிக்கை கொண்டு, அமைப்பின் இரண்டாவது கலீ∴பாவாகிய தனது சகோதரர் ஹஸ்ரத் மிர்ஸா பசீறுத்தீன் மொஹ்மூத் அஹ்மது(ரலி) அவர்களின் கரங்களில் பை-அத்து செய்து கொண்டார்.

மிக இளம் வயதிலிருந்தே வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் தனிமையை விரும்பியிருந்தார். அதிக நேரமும் அல்லாஹ்விடத்தில் துவா செய்வதில் ஆர்வமுடையவராக இருந்தார். அல்லது திருக்குர்-ஆனின் ஆய்வுகளில் மூழ்கியிருந்தார். மார்க்கத்தின் மீதான தனது மகனின் ஆழமான விருப்பத்தைக் குறித்து அன்னாரின் தந்தை நன்கு அறிந்திருந்தார். இருப்பினும் தனது மகனின் எதிர்காலத்தைக் குறித்து ஒரு தந்தை என்ற நிலையில் அவர் கவலையுடனிருந்தார்.

தம் மகனின் தற்போதைய நிலையைப்பற்றி அத்தந்தை கவலைப்படவில்லை. ஏனெனில் அன்னாரின் தந்தை உயிருடன் இருக்கும் வரையில் தம் மகனை கவனித்து கொள்வார். ஆனால் தம் மரணத்திற்கு பிறகு தம் மகனுக்கு என்ன நிகழும் என்பதை எண்ணியே அத்தந்தை கவலைப்பட்டிருந்தார்.

**"தனது மகன் அதிக நேரமும் பிரார்த்தனைகளில் மூழ்கி, மசூதியிலேயே செலவிடுவதற்கு அக்கரையுடையவனாகயிருக்கின்றான்"** என்றும் **"அவன் ஒரு வேலைத்தேடிக்கொள்ளாமலும் மற்றும் நிதிவகைகள் சேர்த்து ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முயற்ச்சிக்காமலும் இருக்கின்றான்"** என்றும் மிர்ஸா குலாம் முர்த்ததா சாஹிப், தனது மகனைப் பற்றி தனது நன்பர்களிடம் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் அக்காலகட்டத்தில்தான் தனது மகனை வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் மஸீஹாக அல்லாஹ் தேர்ந்தெடுத்து உயர்த்திக்கொண்டதற்கு சாட்சியமளிக்க, அவர் நீண்ட காலம் வாழ்ந்திருந்திருந்தால் அது அவருக்கு எந்த அளவிற்கு கௌரவத்தை அளித்திருக்கும்?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தை 1876 ஜுண் மாதம் சூரிய அஸ்தமயத்திற்குப்பின் வபாத்தானார். அன்றைய நாள் மத்தியானம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களுக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது. அவ்வெளிப்பாடானது, அண்மையில் நிகழும் தனது தந்தையின் வபாத்தைப் பற்றிய செய்தியாகயிருந்தது. அந்நிலையில் ஆழ்ந்த துயரத்துடன், தனது வாழ்வாதாரத்தைப் பற்றிய எண்ணத்தால் அன்னார் மிக சோர்வடைந்துகாணப்பட்டார். ஏனெனில் அனைத்துவிதமான காரியங்களையும் தம் தந்தையே தனக்கு செய்து வந்தார். பணம், உணவு மற்றும் பானம் போன்றவையாவும் தம் தந்தையே தனக்கு வழங்கிவந்தார். சுருக்கமாக கூறினால், எதிர்காலம் வறுமையின் நாட்கள் தன்னை காத்திருக்கின்றது என எண்ணி வருத்தமடைந்து வந்த அவ்வேளையில் அல்லாஹ்விடமிருந்து அன்னாருக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது.

*" Is Allah not Sufficient for His servent?*

**“அல்லாஹ், தன் அடியாருக்கு போதுமானவன் அல்லவா?”**

அந்த வெளிப்பாடு அன்னாருக்கு அசாதரணமான ஒரு ஆறுதலையளித்தது. அனைத்து விதமான கவலைகளிலிருந்தும் அன்னார் மீட்சியைப் பெற்றது போன்றும்! மனதுக்கு ஒரு அமைதி வந்தடைந்தது போன்றும்!. எல்லா விதமான கவலைகளிலிருந்தும் அன்னாருக்கு மீட்சியை அளித்ததுடன், அன்னாரின் பாதுகாப்பையும் அல்லாஹ் ஏற்றெடுத்து கொண்டான்.

1882-ல் ஒரு தரிசனத்தில், முஹம்மது (ஸல்) அவர்கள், அன்னருக்கு காட்சியளித்தார். அன்னாருக்கு முதல் வெளிப்பாடு இறங்கியதும் அந்நேரமாகும். மேலும் அல்லாஹ், அன்னாரை தேர்ந்தெடுத்து சீர்திருத்தாளராக எழுப்பிக்கொண்டான். அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை சீரமைப்பதுடன் இஸ்லாமிற்கும் மற்றும் இஸ்லாமிய போதனைகளுக்கும் எதிராக எழும்பிய எல்லா குற்ற சாட்டுகளுக்கும் பதிலளிப்பதற்க்கு அல்லாஹ் அன்னாரை நியமித்தான். திருக்குர் ஆனுடையவும் முஸ்லீம்களுடையவும் பாதுகாவலராக அன்னார் மாறிக்கொண்டார். அன்னார் மூலம் அஹ்மதியா அமைப்பை அல்லாஹ் உருவாக்கினான். துரதிர்ஷ்டம் என கூறலாம் பெரும்பான்மையான முஸ்லீம்களும் அன்னாரின் விலையை உணர்ந்து கொள்ளவில்லை. அன்னாரை அவர்கள் மிக இழிவான பெயர்களில் அழைத்தனர்.

1908 மேய் மாதம் 26-ம் தேதி லாகோரில் வைத்து அன்னார் வாபாத்தானார். துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் ஒரு ஜமாஅத்தை அன்னார் விட்டுச்சென்றார். அன்னாரின் மிகச்சிறந்த போதனைகளை முற்றிலும் நல்ல முறையில் ஒரு நீண்ட காலம் அவர்கள் பரப்பி கொண்டனர். ஆனால் துரதிர்ஷ்டத்தால் காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக ஜமாஅத்தை சார்ந்தவர்கள் அன்னாரின் போதனைகளிலிருந்து அகன்று சென்றனர். மேலும் அவர்கள் அல்லாஹ்விடமிருந்தும் விலகி சென்றனர். இந்த ஜமா அத்தின் தலைவர்கள், நாங்கள் மிக பெரிய அதிகாரிகள் என தற்பெருமை கொண்டார்கள். மேலும் அன்னாரின் போதனைகளை அவர்கள் அவமதித்து கொண்டார்கள். அச்சூழ்நிலையில் **அல்லாஹ்வின் மாபெரும் அருளால், மற்றொரு சீர்திருத்தாளரை அவன் எழுப்பிக்கொண்டான். முழு**

**உலகத்தையும் சீர்திருத்துவதற்கும், இஸ்லாமின் மகத்துவத்தைப் பாதுகாப்பதற்க்கும் மற்றும் ஹஸரத் முஹம்மது (ஸல்) அவர்களுடையவும் ஹஸ்ரத் அஹமது(அலை) அவர்களுடையவும் உயர்த்தகுதியை தக்கவைத்துக்கொள்வதற்குமாக அல்லாஹ் இந்நூற்றாண்டில் என்னை மஸீஹாக எழுப்பிக்கொண்டான். அல்ஹம்துலில்லாஹ்!**

இஸ்லாமின் கொடியின் கீழ் நாம் அனைவரையும் அல்லாஹ் ஒன்றுசேர்ப்பானாக! மேலும் அல்லாஹ்வின் தூதர்களின் மகத்துவத்தை பாதுகாப்பதற்கும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் தோன்றிய சீர்திருத்தாளர்களை மதித்துக் கொள்வதற்கும் அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக! இந்த மாபெரும் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள அல்லாஹ் நமக்கு துணைபுரிவானாக! மக்களிடம் இரக்கமும், அல்லாஹ்வின் மீது பயமும் எப்போதும் நம்மிடம் இருக்க அவன் வழிவகுப்பானாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்

**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**

**Email:** jamal.raother@gmail.com

**Phone:** 9447001832, 04752252663